ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

*சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த*

# ॥ பரமபதசோபானம் ॥

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ॥ பரமபதசோபானம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

வ்யாஜீக்ரு'த்ய விமுக்தி ஸௌத4பத3வீ ஸோபாந ஸத்3வர்ணநம்
ஶாரீரார்ணவ ரத்நஜாதமிஹ ய: ப்ராசீகஶத்ஸர்வஶ: ।
தஸ்மிம்ஸ்திஷ்ட2தி வேங்கடேஶ்வரகவௌ ஸ்ரீப4ாஷ்யகாரோபமே
யம் கஞ்சித் புருஷம் ஹ்யுபாஸிதுமயே மாக3ா மந: ஸ்வஸ்தி தே ॥

தஸ்மை நமோ஽ஸ்து கு3ரவே தாத்3ரு'ஶவிப4வாய வேங்கடேஶாய ।
ப்ராவர்தயஜ்ஜநாநாம் பூ4மௌ பரமபத3ஹர்ம்யஸோபாநம் ॥

தேன் ஏறு தாமரையாள் திருமார்பன் தன்
திண் அருளால் அவன் அடியில் விவேகம் பெற்றிங்கு*
ஊன் ஏறு பவக் குழியை வெறுத்ததற்பின்
ஊர் விரத்தி உடன் வினையின் திரளுக்கஞ்சிக்*
கூன் ஏறு பிறை இறையோன் சாபம் தீர்த்தான்
குரை கழலே சரண் அடைந்து குரம்பை விட்டு*
வான் ஏறும் வழிப் படிகள் அடைவே கண்ட
வண் புகழ்த் தூப்புல் வள்ளல் அருள் பெற்றோமே

‡அடற் புள் அரசினும்* அந்தணர் மாட்டினும்* இன்னமுதக்
கடற் பள்ளி தன்னினும்* காவிரி உள்ளம் உகந்த பிரான்*
இடைப் பிள்ளை ஆகி* உரைத்ததுரைக்கும் எதிவரனார்*
மடைப் பள்ளி வந்த மணம்* எங்கள் வார்த்தையுள் மன்னியதே (1)

கள்ள மனத்துடன்* கண்டு முயன்ற கடு வினையால்*
நள் இருள் ஆழியில்* நற்சுவை ஐந்தென நாடிய ஓர்*

www.prapatti.com

அள்ளலில் நாளும்⋆ விழுந்தழியாவகை ஆரணநூல்⋆
வள்ளல் வழங்கிய⋆ வான் படியான வழி இதுவே (2)

அரு உரு ஆனவை அனைத்தும் அறிவாரேனும்⋆
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லாரேனும்⋆
தரும வழி அழியாமல் காப்பாரேனும் ⋆
தனி மறையின் தாற்பரியம் தருவாரேனும்⋆
இரு வினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது⋆
இங்கே நாம் சிறை இருந்த ஈனம் தீர்க்கும்⋆
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்⋆
தேறாதார் திண் படியில் ஏறாதாரே (3)

மறுத் தார் திருவுடன்⋆ மார்பில் தரித்தவன் வாசகத்தை⋆
மறுத்தார் மயக்கமும்⋆ மற்றதனால் வந்த மா நரகும்⋆
நிறுத்தார் பவத்தில்⋆ நெடு நாள் உழன்றமை கண்டதனால்⋆
வெறுத்தாரண நெறியே⋆ வெள்கி ஓட விரைவர்களே (4)

வான் பட்ட மன் இருளில் மயங்குமாறும்⋆
மறித்தொரு கால் எனை ஊழி சென்றால் அன்றோர்⋆
ஊன் பட்ட உடல் ஆழி வினை ஒழுக்கில்⋆
ஒரு கரையும் காணாதே ஒழுகு மாறும்⋆
தேன் பட்ட விடம் போலத் தித்திக்கின்ற⋆
சிறு பயனே உறு பயன் என்றருந்துமாறும்⋆
தான் பட்ட படி இந்நேர் தானே கண்டு⋆
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே (5)

உலகத்துயர்ந்தவர்⋆ ஒன்றும் பயனில் உறும் துயரும்⋆
அலகில் படாத⋆ அப்போகம் கவர்ந்தெழும் அம்புயத்தோன்⋆
கலகத் தொழில் மது கைடபரால்⋆ படும் கட்டம் எண்ணில்⋆
பல கற்ற மெய் அடியார்⋆ படியார் இக்கடும் பவத்தே (6)

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க⋆
தார் வேந்தர் தொழ வையம் ஆண்டார் மாண்டார்⋆
சந்திரனும் சூரியனும் வீயும் காலம்⋆



www.prapatti.com

தாரகையின் வடமும் அற்றுத் தனி வான் ஆளும்⋆
இந்திரனும் ஏற் உயர்த்த ஈசன் தானும்⋆
ஈர் இரண்டு முகத்தானும் இல்லா அந்நாள்⋆
நம் திருமால் நிலை கண்டார் நாகம் எல்லாம்⋆
நரகென்று நற்பதமே நாடு வாரே (7)

துற அறமே துணிவார்⋆ துணுக்கற்ற இளம் துணிவோர்⋆
உறவிலர் ஆதலின்⋆ நாம் உயர்ந்தார் உடன் ஒன்றி நின்றோம்⋆
மற வழி மாற்றி⋆ எம் மை அலைத் தீர்த்தவர் மன் அருளால்⋆
கறவை உகந்த பிரான்⋆ கழல் சூடும் கருத்தினமே (8)

வந்தன போல் வருவனவும் அனந்தம் ஆகி⋆
மாளாத துயர் தரு வல்வினை நெருப்புக்கு⋆
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்⋆
இன்னமும் இப்பவக் குழிக்கே இழியா வண்ணம்⋆
வெந்ததொரு குழவியை நற்குமரன் ஆக்கும்⋆
வெறித் துளவ வித்தகனார் விதியே கொண்டார்⋆
பந்தனமாம் அவை அனைத்தும் பாறு கைக்குப்⋆
பழ மறையின் பரம நெறி பயிலுவாரே (9)

கரு மாலையில் வரும்⋆ கட்டம் கழிக்கும் கருத்துடையார்⋆
ஒரு மால் பெருகும்⋆ உபோகில் முயன்றும் அதன்றியும் நம்⋆
திரு மால் அடியிணை⋆ திண் சரணாகும் என வரித்தும்⋆
தரு மால் இனி அவை தானே எனத்⋆ தகவெண்ணுவரே (10)

முன் செய்த வினைத் திரளில் முளைத்ததன்றி⋆
முற்றுள்ள முதல் அரிந்து முளைத்த கூற்றில்⋆
தன் செய்ய திரு அருளால் இசைவு பார்த்துத்⋆
தழல் சேர்ந்த தூலம் எனத் தானே தீர்த்துப்⋆
பின் செய்த வினையில் நினைவொன்றாதொன்றும்⋆
பிழை பொறுத்து வேறுளது விரகால் மாற்றும்⋆
என் செய்ய தாமரைக் கண் பெருமான் எண்ணம்⋆
எண்ணாதார் எட்டிரண்டும் எண்ணாதாரே (11)

உறை இட்ட வாள் என⋆ ஊனுள் உறையும் யோகியரை⋆
நறை மட்டொழிவற்ற⋆ நற்றுளவேந்திய நாயகன் தான்⋆
நிறை மட்டிலாத⋆ நெடும் பயன் காட்ட நினைந்து⋆ உடலச்
சிறை வெட்டி விட்டு⋆ வழிப் படுத்தும் வகை செய்திடுமே (12)

முன் கருவி ஈர் ஐந்தும் மனத்தில் கூட்டி⋆
முக்கியமாம் மருத்தில் அவை சேர்த்ததெல்லாம்⋆
நன்குணரும் உயிரினில் சேர்த்தைம் பூதத்தை⋆
நண்ணுவித்துத் தான் தன் பால் வைக்கும் நாதன்⋆
ஒன்பதுடன் வாசல் இரண்டுடைத்தாய் உள்ளே⋆
ஒரு கோடி துயர் விளைக்கும் உடம்பாய் ஒன்றும்⋆
வன் சிறையின் தலை வாசல் திறந்து⋆
நம்மை வான் ஏற வழிப் படுத்த மனம் உற்றானே (13)

தெருள் ஆர் பிரம புரத்திறை சேர்ந்து⋆ இடர் தீர்ந்தவர் தாம்⋆
மருள் ஆர் பிரம புரச் சிறை தீர்ந்த பின்⋆ வந்தெதிர் கொண்டு⋆
அருளால் அமரர் நடத்த⋆ இம்மாயை கடந்த தற்பின்⋆
சுருளார் பவ நரகச்⋆ சுழல் ஆற்றின் சுழற்சியிலே (14)

விழி அல்லால் வேல் இல்லை விண்ணின் மாதர்⋆
மேனி அல்லால் வில் இல்லை மீனவற்கு⋆
மொழி அல்லால் அமுதில்லை என்று முன்னாள்⋆
முத்தி வழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம்⋆
கழி அல்லால் கடல் இல்லை என்பார் போலக்⋆
காரியமே காரணம் என்றுரைப்பார் காட்டும்⋆
வழி அல்லா வழி எல்லாம் கடந்தோம்⋆
மற்றும் வான் ஏறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே (15)

வன் பற்றுடன் மயல் பூண்டு⋆ மற்றோர் கதியால் இன நாள்⋆
என் பற்றது பெறும் தானமும்⋆ எத்தனை போதுளதாம்⋆
துன்பற்ற தன் துணிவால்⋆ துயர் தீர்க்கும் துழாய் முடியான்⋆
இன்புற்ற நல் வழியால்⋆ ஏற்று நற்பதம் எண்ணுவமே (16)



www.prapatti.com

பண்டை இரு வினை ஆற்றில் படிந்து⋆ பாரம்
காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால்⋆
வண்டமரும் மலர் மாதர் மின்னாய் மன்ன⋆
வைசயந்தி மணி வில்லாய் விளங்க வான் சேர்⋆
கொண்டல் அருள் மழை பொழிய வந்ததொப்பாம்⋆
குளிர்ந்து தெளிந்தமுதாய விரசை ஆற்றைக்⋆
கண்டணுகிக் கருத்தாலே கடந்து⋆ மீளாக்
கரை கண்டோர் கதி எல்லாம் கதித்திட்டோமே (17)

பூ வளரும் திரு மாது புணர்ந்த⋆ நம் புண்ணியனார்⋆
தாவளமான தனித் திவம் சேர்ந்து⋆ தமர் உடனே⋆
நா வளரும் பெரு⋆ நான் மறை ஓதிய கீதம் எல்லாம்⋆
பா வளரும் தமிழ்ப்⋆ பல்லாண்டிசை உடன் பாடுவமே (18)

அடல் உரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல⋆
அழுக்கடைந்து கழுவிய நல் தரளம் போலக்⋆
கடல் ஒழுகிக் கரை சேர்ந்த கலமே போலக்⋆
காட்டுத் தீக்கலந்தொழிந்த களிறே போல⋆
மடல் கவரும் மயல் கழிந்த மாதர் போல⋆
வன் சிறை போய் மன்னர் பதம் பெற்றார் போல⋆
உடன் முதலா உயிர் மறைக்கும் மாயை நீங்கி⋆
உயர்ந்த பதம் ஏறி உணர்ந்தொன்றினோமே (19)

‡மண் உலகில் மயல் தீர்ந்து மனம் ததும்பி⋆
மன்னாத பயன் இகந்து மாலே அன்றிக்⋆
கண் இலதென்றஞ்சி அவன் கழலே பூண்டு⋆
கடும் சிறை போய்க் கரை ஏறும் கதியே சென்று⋆
விண் உலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு⋆
விண்ணவர் தம் குழாங்கள் உடன் வேதம் பாடிப்⋆
பண் உலகில் படியாத இசையால் பாடும்⋆
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே (20)

‡மாளாத வினை அனைத்தும் மாள நாம் போய்⋆
வான் ஏறி மலர் மகளார் அன்பு பூணும்⋆


www.prapatti.com

தோளாத மா மணிக்குத் தொண்டு பூண்டு⋆
    தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி ஆடிக்⋆
கேளாத பழ மறையின் கீதம் கேட்டுக்⋆
    கிடையாத பேர் இன்பம் பெருக⋆ நாளும்
மீளாத பேர் அடிமைக்கன்பு பெற்றோம்⋆
    மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே **(21)**

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com